# உன் காயங்களை ஆற்றுவேன். எரே 30 : 17

சகோதரியே, உன் காயங்களை தேவன் ஆற்றுவார். உன் வாழ்க்கையில் ஏற்பட்ட புயல்களை நினைக்கும்பொழுது, உன் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வடிகிறதல்லவா ?

இயேசுவே உனக்கு ஆறுதலாக இருந்து வருகிறார். மற்றவர்களுக்கு நீ ஒரு பாரமாக இருப்பது போல, உனக்குள்ளே ஒரு உணர்வு. இது உன்னை அனுதினமும் காயப்படுத்துகிறது. நீ செய்த சிறிய தவறு, இன்று பெரிய காயமாக மாறிவிட்டது. இனிமேல் இதை ஆற்றமுடியாது என்று நினைக்கிறீர்கள். தலைக்குமேல் வெள்ளம் போய்விட்டது என்று நினைக்கிறீர்கள். இல்லவே இல்லை.

**கர்த்தர் சொல்லுகிறார்.**

**உன் காயங்களை ஆற்றுவேன்** – என்பதாக.

நன்றியோடு தேவனைத் துதிப்போமா ?

சகோதர சகோதரிகளே, இந்த மாதத்தில் அடிக்கடி தேவனுடைய வசனத்தை உங்கள் விசுவாக அறிக்கையாக மாற்றுங்கள்.

**கர்த்தர் என் காயங்களை ஆற்றுவார். –** என்பதாக.

**பக்தன் பாடுகிறார் . . .**

காயப்பட்ட இருதயத்தை கழுவி சுத்தப்படுத்தும்
மாயை கொண்ட நெஞ்சையது மயக்கமின்றி விடுக்கும்.

ஆம், நண்பரே, உம்முடைய காயங்களை ஆற்ற தேவன் சித்தம் கொண்டிருக்கிறார். ஏழரை ஆண்டுகள் என்ன ஈரேழு ஆண்டுகளாகட்டுமே உன் காயங்களை தேவன் ஆற்றுவார். ஊழியரே, கண் கலங்க வேண்டாம். கர்த்தர் தமது ஊழியத்தை குன்றவிடமாட்டார். குறைவின்றி நடத்துவார்.

காயங்களிலிருந்து வடிகிற கல்வாரியின் இரத்தத்தை ஒருமுறை நோக்குவோமா ? தந்தை பெர்க்மான்ஸ் அவர்களின் செய்தியும், ‘‘இரத்தம் ஜெயம், இரத்தம் ஜெயம்’’ என்ற பாடல் உங்களுக்கு உணவாகட்டும். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மாத்திரமே காயப்பட்ட உன் இருதயத்தைக் கழுவி சுத்தப்படுத்த முடியும். ‘‘**இயேசுவின் இரத்தத்தின்**’’ செய்தியை கருத்தாய் படியுங்கள். தேவன் மகிமைப்படுவாராக ! ஆமென்.